

அன்னையார் பின்னிரவு நேரத்தில் நெடுநேரம் ஜபமும் தியானமும் செய்வார். இதற்கான காரணத்தைக் கேட்டபோது, "என் பிள்ளைகள் பலரும் மந்திரதீட்சை பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் நாள்தோறும் ஜபம் செய்வதில்லை. ஆகவே அவர்களின் ஆன்மிக நலனுக்காக நான் செய்கிறேன்", என்று பதிலளித்தார்.

She would spend long hours in Japa and Meditation at the dead of night. When asked the reason, she said: "Many of my children take Mantra Diksha but do not practice Japa regularly. So I am doing all this for their spiritual welfare."



இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஆங்கிலேயே அரசு இழைத்த அநீதிகளைக் கண்டு அன்னையார் வருந்தினார். தம் பிள்ளைகளின் நலனுக்காக அவர் பிரார்த்தனையும் செய்தார். ஆயினும் ஆங்கிலேயர் மீது அவர் சிறிதும் வெறுப்புக் கொள்ளவில்லை. “ஏன், ஆங்கிலேயரும் என் பிள்ளைகள் தான்” என்பார். “நல்லவர்களுக்கு நான் எப்படி அம்மாவோ, அதே போல் கெட்டவர்களுக்கும் நான் அம்மாதான். துன்பம் ஏற்படும் போதெல்லாம் உனக்கு ஓர் அம்மா இருக்கிறாள் என்பதை நினைவில் கொள்”, என்பது அவரது அன்பு மொழி.

Holy Mother was concerned about the harsh treatment meted out to the freedom fighters by the iniquitous British government. She would pray for the safety of her spiritual children. But she bore no malice even against the British government and would say, "Why, the English too are my children." Her words of benediction were: "I am the Mother of the virtuous; I am the Mother of the wicked. Whenever you are in distress, say to yourself, 'I have a Mother.'"



உலகம் முழுவதையும் தம் சொந்தமாகக் கருதிய அன்னையார் மத ஒருமைப்பாட்டைப் பெரிதும் வலியுறுத்தினார். ஒரு சமயம் கிறிஸ்தவ சமய விழா ஒன்றைப் பற்றிக் கேட்ட அளவில் அவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி பற்றிய பாடலின் பொருளை உணர்ந்து கொண்டார். இதன் மூலம் அவரது மிகச் சிறந்த சமயப்பண்பாட்டின் தன்மைவெளிப்பட்டது.

The Holy Mother embodied the Universal Spirit and affirmed the harmony of religions. Once when she heard the meaning of a Christian festival, she could swiftly comprehend the depth of the resurrection hymns. In this we see one of the most impressive aspects of Mother's religious culture.



அன்னையார் 1920 ஜூலை 21-ஆம் நாள் கொல்கத்தாவில் மகாசமாதியடைந்தார். அன்னையார் பிறந்த இடத்திலும் பேலூர் மடத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட இடத்திலும் அமைந்துள்ள கோயில்கள் அன்னையாரின் பிள்ளைகளை அழைத்த வண்ணம் உள்ளன. அவரது வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதன் மூலமும் அவருடைய உபதேசங்களைப் பின்பற்றுவதன் மூலமும் உலகம் முழுவதும் கோடிக் கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் அடைகின்றனர். 1953-இல் அவர் பெயரில் ராமகிருஷ்ணசாரதாமிஷன் என்னும் ஆன்மிக நிறுவனம் தொடங்கப்பட்டது

**அன்னையாரின் கடைசி போதனை:**

“உனக்கு மனஅமைதி வேண்டுமானால் மற்றவர்களிடம் குற்றம் காணாதே. . . . . . . . . இந்த உலகையே உன் சொந்தமாக்கக் கற்றுக் கொள். குழந்தாய், யாருமே அயலாரல்லர். இந்த உலகம் முழுவதும் உன் சொந்தமே”.

Holy Mother Sri Sarada Devi entered Mahasamadi at Kolkata on 21 July 1920. A temple stands in the place of her birth at Jayarambati and also at the place of her samadhi at Belur Math, beckoning one and all to her. Millions of devotees from all over the world derive great peace and blessedness by studying her life and imbibing her teachings. A spiritual organization named after her, Ramakrishna Sarada Mission was later started in 1953. Her last message was, "If you want peace of mind, do not find fault with others....Learn to make the whole world your own. No one is a stranger, my child. The whole world is your own."